பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 11 2025 FRIDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. கர்நாடகா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, உடுப்பியில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா மடத்தில் நடைபெற்று வரும் கீதா பாராயணம் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார்.

2. சமுதாய மாற்றத்திற்கு கல்வி இன்றியமையாதது என்பதை வலியுறத்தியவர் சமூக சீர்திருத்தவாதி Jyoti Rao Phule என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித ஷா கூறியுள்ளார்.

3. ரயில்வே பணியாளர்கள் சிக்னல் மற்றும் தண்டவாள பராமரிப்பில் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுமாறு ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டுள்ளார்

4. தமிழகத்தில் Ditwah புயலை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று சிலியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, கர்நாடகாவின் உடுப்பியில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா மடத்தில் தற்போது நடைபெற்று வரும் கீதா பாராயணம் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார்.

இதில், பிரதமருமன், மடாதிபதிகள், ஆன்மீக அறிஞர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று, பகவத் கீதையை பாராயணம் செய்து வருகின்றனர்.

முன்னதாக, உடுப்பி வந்த திரு. நரேந்திர மோடிக்கு, சாலையின் இருமருங்கிலும் திரண்டு ஏராளமான பொதுமக்கள் வரவேற்பு அளித்தனர்.

பிற்பகலில் கோவா செல்லும் பிரதமர், அங்குள்ள ஆன்மீக மடத்தின் 550வது ஆண்டு விழாவில் பங்கேற்பதுடன், 77 அடி உயர ராமர் சிலையையும் திறந்து வைக்கவுள்ளார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ராவைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதி Jyoti Rao Phule-யின் நினைவு தினத்தை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சமுதாய மாற்றத்திற்கு கல்வி இன்றியமையாதது என்பதை வலியுறத்தியவர் சமூக சீர்திருத்தவாதி Jyoti Rao Phule என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

பெண் கல்விக்காக பாடுபட்டதுடன், சமூகத் தீமைகளிலிருந்து சமுதாயத்தை விடுவிக்கவும் அவர் அயராது பாடுபட்டார் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

ரயில்வே பணியாளர்கள் சிக்னல் மற்றும் தண்டவாள பராமரிப்பில் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுமாறு ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

தில்லியிலிருந்து – சண்டிகர் செல்லும் வழியில் ரயில்வே பணியாளர்களிடம் இன்று கலந்துரையாடிய அவர், உலக அளவில் பின்பற்றப்படும் நடைமுறைகளை இந்தியாவிலும் செயல்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

மேலும், ரயில்வே பணியாளர்களின் கள அனுபவத்தையும் அவர் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து மொஹாலி சென்றடைந்த திரு. அஸ்வினி வைஷ்ணவ், அங்குள்ள செமிகண்டக்டர் ஆய்வுக் கூடத்தை பார்வையிட்டார்.

>>>>>><<<<<<

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள Ditwah புயல், இலங்கையின் திரிகோணமலைக்கு தென்மேற்கே 40 கிலோமீட்டர் தொலைவிலும், காரைக்காலுக்கு தெற்கு-தென்கிழக்கே 320 கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மணிக்கு 7 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வரும் இந்தப் புயல், நாளை மறுநாள் அதிகாலை புதுச்சேரி – வடதமிழகம் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப் பகுதியை நெருங்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாகை உள்ளிட்ட 4 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

Ditwah புயல் காரணமாக, தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று காலை முதல் மிதமான மழை பெய்து வருகிறது. இம்மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஐந்தாவது நாளாக இன்றும் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

புயல் எச்சரிக்கை காரணமாக, ராமேஸ்வரம் கடல்பகுதியில் 80 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மறுஅறிவிப்பு வரும்வரை மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று மீன்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

புயல் பாதிப்புகளை எதிர்கொள்வதற்காக, ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்திலிருந்து தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 10 குழுவினர், புதுச்சேரி மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பாம்பன் பால பகுதியில் வீசும் பலத்த காற்று காரணமாக, ராமேஸ்வரத்திலிருந்து இன்று மாலை 4 மணிக்கு புறப்பட வேண்டிய தாம்பரம் எக்ஸ்பிரஸ் மற்றும் மாலை 5.50-க்கு புறப்பட வேண்டிய சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரயில்கள், மண்டபத்திலிருந்து புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதேபான்று திருவனந்தபுரம் செல்லும் அமிர்தா எக்ஸ்பிரஸ், ராமநாதபுரத்திலிருந்து புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இதனிடையே, புயல் நிலவரம் குறித்து தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சென்னையில் உள்ள அவசரகால செயல்பாட்டு மையத்தில் இன்று அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புயல் பாதிப்பை எதிர்கொள்ள தேவையான முன்னேச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

உலக நாடுகளின் நம்பகமான பங்குதாரராக இந்தியா உருவெடுத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாறிவரும் உலகச் சூழலில் இந்தியாவின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியை சுட்டிக்காட்டிய திரு. ராஜ்நாத் சிங், இதன் காரணமாக, உலகளாவிய பிரச்சினைகளில் இந்தியாவின் கருத்து மதிக்கப்படுவதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

உலக நாடுகளின் நம்பகமான பங்குதாரராக இந்தியா உருவெடுத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாறிவரும் உலகச் சூழலில் இந்தியாவின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியை சுட்டிக்காட்டிய திரு. ராஜ்நாத் சிங், இதன் காரணமாக, உலகளாவிய பிரச்சினைகளில் இந்தியாவின் கருத்து மதிக்கப்படுவதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ், மத்திய மீன்வள தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் – வேளாண் அறிவியல் மையத்துடன் இணைந்து தமிழகத்தின், கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பழங்குடியின மீனவர்களுக்கு மீன் உணவு தயாரிப்பு பயிற்சி அளித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

அமெரிக்க அதிபர் மாளிகை அருகே, இரண்டு பாதுகாப்புப் படை வீரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட

நாடுகளைச் சேர்ந்த Green Card வைத்திருப்பவர்களிடம் தீவிர சோதனை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்பு படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க குடியேற்றப் பிரிவு இயக்குநர் திரு. Joseph Edlow தெரிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் வெனிசுலா, கியூபா, சோமாலியா, காங்கோ, ஈரான், லிபியா, மியான்மர் உள்ளிட்ட நாடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், ஆப்கானிஸ்தானிலிருந்து, அமெரிக்கா வருவோருக்கான குடியேற்ற விண்ணப்பங்கள் மீதான பரிசீலனையை நிறுத்தி வைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளதாக திரு. Joseph Edlow தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் அவசர நிலையை பிரகடனம் செய்து, அந்நாட்டு அதிபர் திரு. Bola Tinubu உத்தரவிட்டுள்ளார்.

அந்நாட்டு தலைநகர் நைஜர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலில் அப்பாவி மக்கள் உயிரிழந்ததுடன் பலர் கடத்திச் செல்லப்பட்டதை அடுத்து, பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வனப்பகுதிகளில் பதுங்கியுள்ள வன்முறைக் குழுக்களை கைது செய்வதற்காக பயிற்சி பெற்ற வனக்காவலர்களை பணியில் ஈடுபடுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, வன்முறை குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டவர்களில் Kebbi-யைச் சேர்ந்த 24 மாணவிகளும், Kwara பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் 38 பேரும் மீட்கப்பட்டிருப்பதாக நைஜீரிய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டி தமிழகத்தில் இன்று தொடங்கியது.

சென்னையில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா - சிலியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது

முன்னதாக, இன்று காலை மதுரையில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில், ஜெர்மனி 4-0 என்ற கோல்கணக்கில் தென்னாப்பிரிக்காவை வென்றது.

>>>>>><<<<<<

போபாலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Prajwal Dev அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட்கணக்கில் Manish Sureshkumar-ஐ வென்றார்.

மற்றொரு ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் Nitin Kumar Sinha அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று, லெபனானை எதிர்கொள்கிறது.

அஹமதாபாதில் இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<<